மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இக்கட்டடத்தின் பல பகுதிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. இக்கட்டடங்களுக்கு கட்டும் பணிக்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி வரையிலும் ரூபாய் 2,12,542 செலவழிக்கப் பட்டுள்ளது. விரைவில் முடிவுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறையார் மருத்துவ மனை.

* 482. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறையார் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

இல்லை.

திரு. எஸ். கணேசன் : என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரே பெரிய அரசு மருத்துவமனை அது. அங்கே மிகப் பெரிய இடத்தில் அது அமைந்திருக்கிறது. கட்டடங்கள், துணைக் கட்டடங்கள் நிரம்ப இருக்கின்றன. போதிய மருந்தும் திறன் வாய்ந்த மருத்துவர்களும் இல்லாத காரணத்தால் அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள காரைக்கால் மருத்துவமனைக்கு அந்தப் பகுதியில் இருக்கும் பெருவாரியான மக்கள் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறையைப் போக்க அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பொறையார் அரசு மருத்துவமனையில் தற்போது 30 படுக்கைகள் உள்ளன. இப்போதைக்கு படுக்கை வசதிகள் போதுமானதாகக் கருதப் படுகிறது. ஆகவே, மேற்படி அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் எதுவும் இப்போதைக்கு இல்லை. அவசியம் ஏற்படும்போது மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

1978 மார்ச் 9]

திரு. எஸ். கணேசன் : என்னுடைய கேள்வி, தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொன்னேன். அங்குள்ள பெண் டாக்டரைப் பற்றி அரசுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : எந்தப் புகாரும் இது வரை வரவில்லை.

சென்னை நகரில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள்.

*483. வினு—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 1976-77 ஆம் ஆண்டில் வீடு புகுந்து திருடும் நிகழ்ச்சிகள் எத்தனை நடைபெற்றன ?

(ஆ) இது தொடர்பாக எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர் ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் :

(அ) 4,162.

(ஆ) 1,814.

திரு. எம். ஏ. ஜெயவேலு : சமீபத்தில் குற்றங்கள் அதி கரித்திருப்பதாகத் தெரிகிறது. மயிலே மயிலே என்ருல் இறகு போடாது, இந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அதிகமான சுதந்திரம் காவல் துறையினருக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : என்னிடம் புள்ளிவிவ ரங்களே இருக்கின்றன. காவல் துறையினர் அதிக தீவிரமாகப் பணியை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலே, வழக்குகள் போடுவதிலே முயற்சிகளில் ஈடுபடுகிருர்கள். ஆக ஒழுங்கான முறையில் காவல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. செல்லப்பன் : வீடு புகுந்து திருடிய நிகழ்ச்சிகளில் கொலைகள் நடந்துள்ளனவா ? ஆம் எனில், அதுபற்றிய தகவலை அவைக்குத் தர இயலுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS